AL/2014/49/T-I

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka Department of Examinations, Sri Lanka Department of Examinations, Sri Lanka

**ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව**
**இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்**
**Department of Examinations, Sri Lanka**

**අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2014 අගෝස්තු**
**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தரப்) பரீட்சை, 2014 ஓகஸ்ற்**
**General Certificate of Education (Adv. Level) Examination, August 2014**

| | | | |
|---|---|---|---|
| ක්‍රිස්තියානි ශිෂ්ටාචාරය I<br>கிறிஸ்தவ நாகரிகம் I<br>Christian Civilization I | 49 | T | I |

පැය දෙකයි
*இரண்டு மணித்தியாலம்*
*Two hours*

**அறிவுறுத்தல்கள் :**

※ **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.

※ விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது **சுட்டெண்ணை** எழுதுக.

※ விடைத்தாளின் பிற்பக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.

※ 1 தொடக்கம் 50 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என எண்ணிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிந்தெடுத்து, **அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய** விடைத்தாளில் **புள்ளடி** (×) இடுவதன் மூலம் காட்டுக.

**1.** ஆபிரகாமின் பிறப்பிடம்
(1) யூபிரட்டீஸ் - ரைகிறிஸ் நாகரிகப் பிரதேசம்
(2) நைல் நதிப் பள்ளத்தாக்கு நாகரிகப் பிரதேசம்
(3) பலஸ்தீனா
(4) கிரேக்கம்
(5) மோவாப்

**2.** பழைய ஏற்பாட்டுக் காலத்தில் சிறப்புப் பண்புகளைக் கொண்ட தலைவர்கள் அல்லது **நீதிபதிகள்** என அழைக்கப்பட்டோர்
(1) தாவீது அரசர் காலத்து இராணுவ அதிகாரிகள்
(2) சலமோன் அரசர் காலத்து ஞான ஆசிரியர்கள்
(3) நசரேத்தூர் இயேசுவின் காலத்து பரிசேயர்
(4) அடிமை வாழ்விற்கு முன்பு எகிப்திலிருந்த எபிரேயத் தலைவர்கள்
(5) விடுதலைப் பயணத்தின் பின் கானான் தேசத்தில் ஆட்சி செய்த தலைவர்கள்

**3.** பன்னிரு கோத்திரங்களையும் ஒரே குடையின்கீழ் ஆட்சி செய்த அரசர்கள்
(1) தாவீது அரசனும் ஜெறேபோவாம் அரசனும்
(2) சலமோன் அரசனும் றெகேபோவாம் அரசனும்
(3) மன்னர்கள் சவுலும் சலமோனும்
(4) மன்னர்கள் சவுலும் யோசுவாவும்
(5) மன்னர்கள் தாவீதும் செடக்கியாவும்

**4.** 'செப்போறிஸ்' என்ற நகரம் அமைந்திருந்தது
(1) சமாரியாவில்
(2) கலிலேயாவில்
(3) கரையோரச் சமவெளிகளில்
(4) ஈடோமில்
(5) நேயேப் (தெற்கு) இல்

**5.** 'ஹனுக்கா' என்பது
(1) புளியாத அப்பப் பண்டிகை
(2) கூடாரத் திருவிழா
(3) பெந்தக்கோஸ்து விழா
(4) ஆலய அர்ப்பண விழா
(5) உயிர்ப்பு விழா

**6.** 'மெசியா' அல்லது 'அபிஷேகம் செய்யப்பட்டவர்' என்பது பழைய ஏற்பாட்டில் யாரைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டது ?
(1) மோயீசன்
(2) சிறப்புப் பண்புகளைக் கொண்ட தலைவர்கள்/நீதிபதிகள்
(3) அரசர்கள்
(4) குருக்கள்
(5) தலைவர்களான இறைவாக்கினர்கள்

**7.** திருச்சபையின் மிகப் பழைமையான விழாக்கள்
(1) கிறிஸ்து பிறப்பு விழாவும் உயிர்ப்பு விழாவும்
(2) மரியாயின் மாசற்ற உற்பவமும் உயிர்ப்பு விழாவும்
(3) உயிர்ப்பு விழாவும் பெந்தக்கோஸ்து விழாவும்
(4) உயிர்ப்பு விழாவும் விண்ணேற்பு விழாவும்
(5) உயிர்ப்பு விழாவும் கூடார விழாவும்

[பக். 2 ஐப் பார்க்க

**8.** உயிர்ப்புப் பெருவிழா வசந்தகால பௌர்ணமியின் பின்னர் வரும் முதலாம் ஞாயிறன்று கொண்டாடப்பட வேண்டுமென எந்தப் பொதுச்சங்கத்தில் தீர்மானிக்கப்பட்டது ?
(1) நிசேயா பொதுச்சங்கத்தில்
(2) கொன்ஸ்தாந்திநோபிள் பொதுச்சங்கத்தில்
(3) திரிதெந்து பொதுச்சங்கத்தில்
(4) 1ஆம் வத்திக்கான் பொதுச்சங்கத்தில்
(5) 2ஆம் வத்திக்கான் பொதுச்சங்கத்தில்

**9.** தென் அரசில் இறைவாக்குரைத்த இறைவாக்கினர்கள்
(1) ஆமோஸ், ஓசியா, ஜெரேமியா
(2) எசெக்கியேல், ஜெரேமியா, ஓசியா
(3) எலியா, மீக்கா, ஜெரேமியா
(4) எசாயா, மீக்கா, ஜெரேமியா
(5) சக்கரியா, எலியா, எசாயா

**10.** திருச்சபைக்கு எதிரான முதலாவது, பத்தாவது கலாபனைகளை முன்னெடுத்த உரோமப் பேரரசர்கள்
(1) நீரோ, தொமிசியன்
(2) தொமிசியன், வலேரியன்
(3) திராஜன், டியோகிளேசியன்
(4) நீரோ, டியோகிளேசியன்
(5) நீரோ, வலேரியன்

**11.** கி.பி. முதல் மூன்று நூற்றாண்டுகளில் உரோமைய வல்லரசில் பரவலாகப் பயன்படுத்தப்பட்ட மொழி
(1) இலத்தீன்
(2) எபிரேயம்
(3) கிரேக்கம்
(4) அரமேயம்
(5) பேர்சிய மொழி

**12.** சிலுவைப் போர் முன்னெடுக்கப்பட்டமைக்கான முக்கிய காரணம்
(1) கிறிஸ்தவர்கள் புனித பூமியைத் தரிசிப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்குதல்
(2) இஸ்லாமியரைத் தண்டித்தல்
(3) இஸ்லாமியர் கைப்பற்றியிருந்த புனித பூமியின் இடங்களை மீளப் பெறுதல்
(4) திருத்தந்தையரின் கட்டளைகளுக்குப் பணிதல்
(5) இஸ்லாமிய நாடுகளில் கிறிஸ்தவத்தைப் பரப்புதல்

**13.** ஆரம்ப காலத் துறவற வாழ்வில் **இடம்பெறாத** விடயம்
(1) நீண்ட நேரம் செபத்தில் ஈடுபடல்
(2) நோன்பு நோற்றல்
(3) உடல் உழைப்பில் ஈடுபடல்
(4) குழுவாகச் செபித்தல்
(5) விவிலியத்தைப் பிரதியெடுத்தல்

**14.** குளுணி துறவற சபையின் வளர்ச்சிக்குத் தலைமை தாங்கியவர்
(1) புனித ஹியு
(2) புனித டன்ஸ்ரன்
(3) புனித புறூணோ
(4) புனித பீற்றர் டெமியன்
(5) புனித றொமோல்ட்

**15.** பின்வரும் கூற்றுகளைக் கருதுக.

A - வல்தேசியன் சபை ஓர் இரவலர் சபை ஆகும்.
B - பிரான்சிஸ்கன் சபை ஓர் இரவலர் சபை ஆகும்.
C - குளுணி ஓர் இரவலர் சபை ஆகும்.

மேலுள்ளவற்றுள் சரியான கூற்று/கூற்றுகள்
(1) A மட்டும்
(2) B மட்டும்
(3) C மட்டும்
(4) A யும் B யும் மட்டும்
(5) B யும் C யும் மட்டும்

**16.** துறவற சபைக்கான ஒழுங்கு முறைகள் சில கீழே தரப்பட்டுள்ளன.

A - அகுஸ்தீனாரின் ஒழுங்குகள்
B - சிஸ்ரேசியன் ஒழுங்குகள்
C - ஆசீர்வாதப்பரின் ஒழுங்குகள்

இவற்றுள் புனித டோமினிக் தமது துறவற சபைக்கான ஒழுங்கு முறைகளைத் தயார்படுத்தும்போது அடிப்படையாகக் கொண்ட ஒழுங்குமுறை/ஒழுங்குமுறைகள்
(1) A மட்டும்
(2) B மட்டும்
(3) C மட்டும்
(4) A யும் B யும் மட்டும்
(5) A யும் C யும் மட்டும்

**17.** திருச்சபையில் சீர்திருத்தத்தை முன்னெடுத்த மாட்டின் லூதர் அவர்கள் முன்னர்
(1) இயேசு சபையைச் சார்ந்தவர்.
(2) பிரான்சிஸ்கன் சபையைச் சார்ந்தவர்.
(3) டொமினிக்கன் சபையைச் சார்ந்தவர்.
(4) அகுஸ்தீனார் சபையைச் சார்ந்தவர்.
(5) சிஸ்ரேசியன் சபையைச் சார்ந்தவர்.

**18.** மார்டீன் லூதரின் வாழ்வுடன் **பொருந்தாத** கூற்று எது ?
(1) அவர் ஜேர்மன் நாட்டவர், அகுஸ்தீனார் சபையைச் சார்ந்த துறவியாவார்.
(2) விசுவாசத்தினால் மட்டும் ஒருவர் நீதிமானாக முடியுமெனப் போதித்தவர்.
(3) அவர் பரிபூரண பலன் என்பதற்கு எதிராகப் போதித்தார்.
(4) அவரது மறைக்கல்வி நூல் வினா-விடை வடிவத்தில் அமைந்தது.
(5) அவர் திருமுழுக்கையும் உறுதிப்பூசுதலையும் மட்டும் திருவருட்சாதனங்களாக ஏற்றுக்கொண்டார்.

[பக். 3 ஐப் பார்க்க

e-தக்ஸலாவ The National e-learning Portal for The General Education

**19.** 'விசுவாசத்தின் பாதுகாவலர்' எனப் பத்தாவது சிங்கராயர் (லியோ) திருத்தந்தையால் கௌரவிக்கப்பட்ட மன்னன்
(1) VII ஆம் கென்றி (2) V ஆம் சார்ள்ஸ் (3) VIII ஆம் கென்றி
(4) சாள்ஸ் மேன் (5) 1 ஆம் டொன் மனுவல்

**20.** யூத நாகரிகத்தில் செல்வாக்குச் **செலுத்தாத** நாகரிகம்
(1) பபிலோனிய நாகரிகம் (2) சுமேரிய நாகரிகம்
(3) அசீரிய நாகரிகம் (4) மொசப்பத்தேமிய நாகரிகம்
(5) ஐரோப்பிய நாகரிகம்

**21.** எகிப்திய பிரமிட்டுகள் நிறுவப்பட்டதன் நோக்கம்
(1) எகிப்திய சக்கரவர்த்திகள் அதிக அதிகாரம் கொண்டவர்கள் என்பதனை வெளிப்படுத்துதல்
(2) எகிப்தியர் உயர் நாகரிகம் அடைந்தவர்களாக வாழ்ந்தமையை வெளிப்படுத்துதல்
(3) மரணத்தின் பின்பு உயிர்ப்பு உண்டு என்னும் உண்மையை வலியுறுத்துதல்
(4) பாரவோன் மன்னர்களை கௌரவப்படுத்துதல்
(5) எகிப்தியர் மிகச் சிறந்த கட்டடக் கலைஞர்கள் என்பதை எடுத்துக்காட்டல்

**22.** உலகப் படத்தை முதலில் வரைந்தவர்கள்
(1) கிரேக்கர்கள் (2) உரோமர் (3) எகிப்தியர்
(4) மொசப்பத்தேமியர் (5) அசீரியர்

**23.** அறிவையும் ஆய்வையும் அடிப்படையாகக் கொண்டு முடிவெடுக்கும் முறையை அறிமுகப்படுத்தியவர்கள்
(1) உரோமர் (2) அசீரியர் (3) எகிப்தியர்
(4) கிரேக்கர் (5) பபிலோனியர்

**24.** 'ஒவ்வொரு காரியத்திற்கும் ஒரு காரணமுண்டு' என்ற கோட்பாட்டை முதலில் முன்வைத்தவர்
(1) சோக்கரட்டீஸ் (2) பிளேட்டோ (3) புனித தோமஸ் அக்குவைனஸ்
(4) அரிஸ்டோட்டல் (5) புனித அகுஸ்தீனார்

**25.** ஐரோப்பியத் திருச்சபை (மேற்குத் திருச்சபை)யின் வழிபாட்டு இசையின் தந்தை
(1) நிசேயா புனித கிறகோரியார் (2) புனித பெனற்
(3) புனித அகுஸ்தீனார் (4) பீத்தோவன்
(5) பெரிய கிறகோரியார்

**26.** கீழைத்தேச மரபிலான துறவற வாழ்வை மேலைத்தேசத்திற்கு அறிமுகம் செய்தவர்
(1) புனித அத்தனேசியஸ் (2) புனித பசில்
(3) பக்கோமியஸ் (4) எகிப்தின் புனித அந்தோனியார்
(5) புனித பெனடிற்

**27.** பின்வரும் விடயங்களைக் கருதுக.
A - விடைக்கான பின்னணியைத் தயார் செய்தல்
B - வினாவை முன்வைத்தல்
C - விடையை முன்வைத்தல்
D - சார்பாகவும் எதிராகவும் காரணங்களை முன்வைப்பது
E - காரணத்தின் அடிப்படையில் ஏற்றுக்கொள்ளக்கூடிய முடிவுக்கு வருதல்

மேலுள்ளவற்றுள் 'கொலாஸ்ரிசிசத்தில்' (scholasticism) உள்ளடங்குபவை
(1) A, B, C (2) A, D, E (3) B, C, D
(4) B, D, E (5) C, D, E

**28.** 'கிறிஸ்து வழி வாழ்வு' (Imitation of Christ) என்னும் நூலை எழுதியவர்
(1) டான்ரே (2) தோமஸ் ஆ. கெய்ம்ஸ்
(3) புனித அவிலா திரேசா (4) புனித சிலுவை அருளப்பர்
(5) புனித அகுஸ்தீனார்

**29.** பின்வருவனவற்றுள் 'பைசாந்திய' ஆலய அமைப்பு முறை பற்றிய **பொருத்தமற்ற** விபரிப்பு எது ?
(1) நேரான அமைப்புக்குப் பதிலாக உறுதியான அமைப்பைக் கொண்டது.
(2) தட்டையான கூரைக்குப் பதிலாக அரைவட்ட முகப்புக் கூரையைக் கொண்டது.
(3) மங்கலான ஒளிக்குப் பதிலாக பிரகாசமான ஒளிக் கீற்று உள்வருவதற்கான ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
(4) கொன்ஸ்தாந்திநோபிள் புனித சொபியா ஆலயம் பைசாந்திய தேவாலயங்களுக்கு எடுத்துக்காட்டாகும்.
(5) ஆலயத்தின் மத்திய பகுதியில் சுவரோ தூணோ காணப்படுவதில்லை.

[பக். 4 ஐப் பார்க்க

**30.** பரீஸ் நோத்திரே டாம் ஆலயத்தின் அமைப்பு
(1) உரோமைய ஆலய அமைப்பு முறையைக் கொண்டது.
(2) பைசாந்திய ஆலய அமைப்பு முறையைக் கொண்டது.
(3) கோதிக் ஆலய அமைப்பு முறையைக் கொண்டது.
(4) பைசாந்திய, கோதிக் ஆலய அமைப்பு முறைகளின் கலப்பு ஆகும்.
(5) கோதிக், உரோமானிய ஆலய அமைப்பு முறைகளின் கலப்பு ஆகும்.

**31.** 'பிரஸ்கோ' ஓவிய முறையை / புதிய சுவர்களில் ஓவியம் வரையும் முறையை முதன்முதலில் அறிமுகப்படுத்தியவர்
(1) மைக்கல் ஆஞ்சலோ
(2) ஜியான்லோரென்சோ பர்மினி
(3) லியோனாடோ டாவின்சி
(4) கியற்டோ டி போடோன்
(5) இறபாயல் சன்சியோ

**32.** இலங்கையில் காணப்பட்ட சில வகையான பாடசாலைகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

A - அரச பாடசாலைகள்
B - செமினறி பாடசாலைகள்
C - பாலர் பாடசாலைகள்
D - மிசனறி பாடசாலைகள்
E - பிரிவேனாப் பாடசாலைகள்

இவற்றுள் ஆங்கிலேயர் ஆட்சியின்போது காணப்பட்ட மூன்று வகைப் பாடசாலைகள்
(1) A, B, C என்பன.
(2) A, B, E என்பன.
(3) A, D, E என்பன.
(4) B, C, D என்பன.
(5) C, D, E என்பன.

**33.** கிறிஸ்தவப் பாடசாலைகள் இலங்கை அரசினால் சுவீகரிக்கப்பட்ட ஆண்டு
(1) 1860
(2) 1950
(3) 1954
(4) 1960
(5) 1965

**34.** பின்வருவோருள் கல்வியியலாளரும் இலங்கைத் திருச்சபை வரலாற்றாசிரியரும் இயேசு சபையைச் சார்ந்தவருமானவர்
(1) பீற்றர் பிள்ளை அடிகள்
(2) டொன் பீற்றர் அடிகள்
(3) எஸ். ஜி. பெரேரா அடிகள்
(4) தனிநாயகம் அடிகள்
(5) வண. வில்லி விக்கிரமசிங்ஹ

**35.** பின்வருவனவற்றுள் மறைந்த ஆயர் பிராங் மார்க்கஸ் பெனான்டோ அவர்கள் தொடர்பான **பொருத்தமற்ற** கூற்று
(1) ஆயர் எட்மன்ட் பீரிஸ்சைத் தொடர்ந்து சிலாபம் மறை மாவட்ட ஆயரானார்.
(2) இரண்டாம் வத்திக்கான் சங்க அமர்வில் பங்குபற்ற வாய்ப்புக்கிட்டிய போதும் பங்குபற்றவில்லை.
(3) சிலாபம் மறை மாவட்டத்தின் முதலாவது மறை மாவட்ட குருக்களில் முதல் ஆயர் ஆவார்.
(4) கொழும்பு மறை மாவட்ட துணை மாவட்ட ஆயராகப் பணியாற்றியவர்.
(5) நுரைச்சோலை நிலக்கரி மின்உற்பத்தி நிலையம் அமைக்கப்படுவதற்கு எதிராகக் குரல் கொடுத்தவர்.

**36.** யாக்கோமே கொன்சால்வெஸ் அடிகளார் இலங்கைக்கு வருகை தந்த ஆண்டு
(1) 1676
(2) 1689
(3) 1705
(4) 1711
(5) 1742

**37.** யாக்கோமே கொன்சால்வெஸ் அடிகளார் நூல்களை **எழுதாத** மொழி
(1) சிங்களம்
(2) தமிழ்
(3) போர்த்துக்கேயம்
(4) ஒல்லாந்து
(5) ஆங்கிலம்

**38.** அனுராதபுரத்தில் தொல்பொருள் ஆய்வுகளின்போது பேர்சிய சிலுவை கண்டெடுக்கப்பட்ட ஆண்டு
(1) 1612
(2) 1796
(3) 1912
(4) 1948
(5) 1960

**39.** ஓவியர் என். எஸ். கொடமான்ன எந்த ஆலயத்தின் உட்கூரையில் தமது ஓவியத்தை வரைந்தார் ?
(1) கொச்சிக்கடை புனித அந்தோனியார் ஆலயம்
(2) பொரல்ல புனித பவுல் பேராலயம்
(3) நீர்கொழும்பு புனித மரியாள் ஆலயம்
(4) அம்பிட்டிய தேசிய குருத்துவக் கல்லூரி
(5) கொட்டாஞ்சேனை புனித லூசியா பேராலயம்

**40.** இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கம் வெளியிட்ட ஏடுகளின் எண்ணிக்கை
(1) 10
(2) 12
(3) 14
(4) 16
(5) 22

[பக். 5 ஐப் பார்க்க

**41.** இரண்டாம் வத்திக்கான் சங்கம் வெளியிட்ட ஏடுகளில் சமூகம், பண்பாடு, குடும்பம், பொருளாதாரம், சமாதானம் என்பன பற்றிக் குறிப்பிடும் வெளியீடு
(1) திருச்சபை (2) கிறிஸ்தவ ஒன்றிப்பு (3) திருவழிபாடு
(4) இன்றைய உலகில் திருச்சபை (5) கிறிஸ்தவக் கல்வி

**42.** கிறிஸ்தவ ஒன்றிப்பு வாரம் கொண்டாடப்படுவது
(1) ஜனவரி 18 – 25ஆம் திகதி வரை (2) பெப்ரவரி 4 – 11ஆம் திகதி வரை
(3) மார்ச் 18 – 25ஆம் திகதி வரை (4) மே 1 – 7ஆம் திகதி வரை
(5) நவம்பர் 22 – 29ஆம் திகதி வரை

**43.** உலக கிறிஸ்தவ சபைகளின் சம்மேளனம் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு
(1) 1930 (2) 1948 (3) 1956 (4) 1960 (5) 1962

**44.** ஓர் ஆசிய நாட்டிலிருந்து மற்றுமோர் ஆசிய நாட்டிற்கு மறை பரப்பாளராகச் சென்ற முதல் ஆசிய நாட்டவர்
(1) புனித பிரான்சிஸ் சவேரியார் (2) அன்னை திரேசா
(3) அருளாளர் யோசப் வாஸ் (4) யாக்கோமே கொன்சால்வெஸ் அடிகள்
(5) புனித அந்தோனியார்

**45.** போர்த்துக்கேய மிசனறிமாரை முதன்முதலில் இலங்கைக்கு வரவழைத்த இலங்கை மன்னன்
(1) VII ஆம் புவனேகபாகு (2) IX ஆம் தர்ம பராக்கிரமபாகு (3) I ஆம் சங்கிலி
(4) VI ஆம் விஜயபாகு (5) I ஆம் இராஜசிங்கன்

**46.** முதலில் காலியிலும் தொடர்ந்து யாழ்ப்பாணத்திலும் மறைதூதுப் பணியாற்றிய ஒல்லாந்த சீர்திருத்த சபையைச் சார்ந்த மறைதூதர்
(1) வண. ஜேம்ஸ் காட்டர் (2) வண. பிலிப் பல்தேயுஸ்
(3) வண. கபிரியேல் பக்சேக்கு (4) வண. யோசப் றொபேட்ஸ்
(5) வண. வோட்

**47.** பின்வருவனவற்றுள் அருளாளர் யோசப் வாஸ் அவர்கள் தொடர்பான **பொருத்தமற்ற** கூற்று எது ?
(1) அவர் இந்தியாவின் கோவா என்னும் இடத்தவர்.
(2) கொழும்பில் 1995 இல் 2ஆம் யோன் பவுல் திருத்தந்தையால் அருளாளர் நிலைக்கு உயர்த்தப்பட்டவர்.
(3) எடுத்துக்காட்டான மறைபரப்பாளர் ஆவார்.
(4) இறை பராமரிப்பில் முற்றும் நம்பிக்கை கொண்டவர்.
(5) பல பாடசாலைகளை நிறுவியவர் ஆவார்.

**48.** பென்சிலின் மருந்தைக் கண்டுபிடித்த கிறிஸ்தவ விஞ்ஞானி
(1) சேர். ஐசாக் நியூட்டன் (2) அலெக்சாண்டர் கிரகம்பெல்
(3) அல்பேட் அய்ன்ஸ்ரயின் (4) அலெக்சாண்டர் பிளமின்
(5) பியர் தெய்ல்ஹார்ட் டி சார்டன்

**49.** போர்த்துக்கேயர் ஆட்சியின்போது கற்பித்தல் முறையாக நாடகத்தையும் இசையையும் பயன்படுத்திய துறவற சபை
(1) இயேசு சபை (2) பிரான்சிஸ்கன் சபை (3) டொமினிக்கன் சபை
(4) அகுஸ்தீனார் சபை (5) கார்மேல் சபை

**50.** 'மனிதனின் தோற்றம்' (Phenomenon of Man) என்னும் நூலை எழுதியவர்
(1) சேர். ஐசாக் நியூட்டன் (2) பியர் தெய்ல்ஹார்ட் டி சார்டன்
(3) புனித அகுஸ்தீனார் (4) புனித தோமஸ் அக்குவைனாஸ்
(5) அல்பேட் அய்ன்ஸ்ரயின்

* * *

AL/2014/49/T-II

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2014 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2014 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2014

ක්‍රිස්තියානි ශිෂ්ටාචාරය II
கிறிஸ்தவ நாகரிகம் II
Christian Civilization II

49 T II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

**அறிவுறுத்தல்கள் :**

* பகுதி **I** இல் எவையேனும் **இரண்டு** வினாக்களையும் பகுதி **II** இல் எவையேனும் **மூன்று** வினாக்களையும் தெரிவுசெய்து, எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.
* ஒவ்வொரு வினாவின் சரியான விடைக்கும் **20** புள்ளிகள் உரித்தாகும்.

## பகுதி I

1. (i) திருத்தூதர் பவுலின் பணிகள் சிறப்பாயமைந்தமைக்கு அவரிடம் காணப்பட்ட சிறந்த ஆளுமைப் பண்புகள் **நான்கினைக்** குறிப்பிடுக.
   (ii) திருத்தூதர் பவுல் தமது முதலாம் திருத்தூதுப் பயணத்தின்போது தரிசித்த **நான்கு** இடங்களின் பெயர்களைப் பெயரிடுக.
   (iii) குடும்பம் பற்றி திருத்தூதர் பவுல் குறிப்பிடும் **நான்கு** படிப்பினைகளைப் பெயரிட்டு, அவை இடம்பெறும் மடல்களையும் குறிப்பிடுக.
   (iv) கிறிஸ்துவின் இரண்டாம் வருகை பற்றி புனித பவுலின் படிப்பினைகள் **நான்கினைக்** குறிப்பிடுக.
   (v) பிலிப்பியருக்கு எழுதிய மடலில் குறிப்பிட்டுள்ளபடி புனித பவுல் கிறிஸ்துவின் தாழ்ச்சி பற்றிக் கூறும் **நான்கு** படிப்பினைகளைக் குறிப்பிடுக.

2. (i) மிலான் சாசனத்தால் திருச்சபைக்குக் கிடைத்த **நான்கு** நன்மைகளைக் குறிப்பிடுக.
   (ii) ஆரம்பகால துறவற சபைகளில் காணப்பட்ட **நான்கு** முற்போக்கான விடயங்களைக் குறிப்பிடுக.
   (iii) புனித ஆசீர்வாதப்பரால் நிறுவப்பட்ட துறவற சபையில் காணப்பட்ட **நான்கு** சிறந்த பண்புகளைக் குறிப்பிடுக.
   (iv) திருச்சபையில் புதுப்பித்தலை ஏற்படுத்த இரவலர் சபையினர் மேற்கொண்ட **நான்கு** நடைமுறைகளைக் குறிப்பிடுக.
   (v) சீர்திருத்தம் அடையாதவர்கள் என அழைக்கப்பட்ட மக்களின் வாழ்வில் காணப்பட்ட **நான்கு** முற்போக்கான பண்புகளைக் குறிப்பிடுக.

3. (i) கிறிஸ்தவத்தின் வளர்ச்சிக்கும் பரம்பலுக்கும் ஐரோப்பிய கலாசாரம் ஆற்றிய பங்களிப்புகள் **நான்கினைக்** குறிப்பிடுக.
   (ii) யூத நாகரிகத்தில் செல்வாக்குச் செலுத்திய யூப்பிரட்டீஸ், ரைகிறிஸ் நாகரிகங்களின் **நான்கு** பண்புகளைக் குறிப்பிடுக.
   (iii) கிறிஸ்தவத்தில் கிரேக்க நாகரிகத்தினால் ஏற்பட்ட செல்வாக்குகள் **நான்கினைக்** குறிப்பிடுக.
   (iv) உரோம சாம்ராச்சியத்தில் கிறிஸ்தவம் வேகமாகப் பரவுவதற்கு சாதகமாய் அமைந்த **நான்கு** காரணிகளைக் குறிப்பிடுக.
   (v) மனித நேயப் பணிகளை மேற்கொண்டுவரும் சர்வதேச நிறுவனங்கள் **நான்கினைப்** பெயரிடுக.

## பகுதி II

4. கிறிஸ்துவின் வார்த்தைகளையும் செயல்களையும் புரிந்துகொள்ள அவர் வாழ்ந்த காலத்து யூத கலாசாரம் பற்றிய அறிவு அடிப்படையானது.
   (i) கிறிஸ்து வாழ்ந்த காலத்து யூத பிரபுக்களின் ஆடம்பர வாழ்வு பற்றி விவரிக்குக.
   (ii) கிறிஸ்து வாழ்ந்த காலத்து யூதர்களின் சமூகத்தில் வரி வசூலிப்போரின் நிலைமையை விளக்குக.
   (iii) இயேசுவின் காலத்தில் யூதர்களுக்கும் சமாரியர்களுக்குமிடையில் நிலவிய முரண்பாடுகளை விவரிக்குக.
   (iv) யூத சமூகத்தில் பெண்கள் எவ்வாறாக ஆண்களை விடக் கீழ்நிலையிலுள்ளவர்கள் எனக் கருதப்பட்டார்கள் என்பதனை விளக்குக.

[பக். 2 ஐப் பார்க்க

**5.** நாசரேத்தூர் இயேசுவின் கற்பித்தல்களை விளக்குவதற்குப் பாலஸ்தீன அரசியல், சமூக, கலாசாரப் பின்புலம் தொடர்பான அறிவு உதவியாயிருக்கும்.

(i) இயேசுவின் காலத்தில் யூதர்கள் மத்தியில் வழக்கிலிருந்த திருமண ஒப்பந்தம், குடும்ப வாழ்வு பற்றி விவரிக்குக.

(ii) 'மிஸ்னா' என்னும் நூல் பொதுச்சங்கம் பற்றிக் கூறும் விடயங்களை விளக்குக.

(iii) இயேசுவின் காலத்தில் யூத சமூகத்தில் தாழ்த்தப்பட்டோராகக் கருதப்பட்ட குழுவினர் யாவர் எனக் குறிப்பிட்டு, அவற்றுள் ஒரு குழுவினரைப் பற்றி விவரிக்குக.

(iv) இயேசுவின் காலத்தில் யூதர்கள் மத்தியில் வழக்கிலிருந்த சுத்திகரிப்புச் சடங்கு, பாவப்பரிகாரச் சடங்கு என்பன பற்றி விவரிக்குக.

**6.** ஆசியத் திருச்சபைகள் புதிய உலக நாகரிகத்தை உருவாக்குவதில் பெரும் பங்களிப்புச் செய்யலாம்.

(i) புதிய உலக நாகரிகத்தை உருவாக்குவதில் இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் பங்களிப்பு பற்றி விவரிக்குக.

(ii) சமூக மேம்பாடு தொடர்பாக இரண்டாம் வத்திக்கான் சங்கம் முன்வைத்துள்ள முக்கிய கருத்துகள் யாவையெனக் குறிப்பிடுக.

(iii) ஆசியாவில் கிறிஸ்தவ ஒற்றுமையை ஏற்படுத்துவதற்குச் சாதகமாகவும் பாதகமாகவும் விளங்கும் காரணிகளைக் குறிப்பிடுக.

(iv) ஆசியப் பிராந்தியத்தில் கிறிஸ்தவம் அர்த்தமுள்ள மதமாக விளங்க திருச்சபை எவ்வாறான துறைகளில் கூடிய கவனம் செலுத்த வேண்டும் என்பதனை விவரிக்குக.

**7.** லூதர் முன்வைத்த சீர்திருத்தம் திருச்சபையில் முற்போக்கான, பின்னடைவான தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது.

(i) புரட்டஸ்தாந்து சீர்திருத்தத்திற்கு வழிகோலிய சமூக, அரசியல் பின்னணி பற்றி கருத்துரைக்குக.

(ii) திருச்சபையில் காணப்படுவதாக மாட்டின் லூதர் சுட்டிக்காட்டிய சீர்கேடுகளை விவரிக்குக.

(iii) புரட்டஸ்தாந்து சீர்திருத்தத்தின் விளைவாகக் கத்தோலிக்க திருச்சபையில் ஏற்பட்ட புதுப்பித்தலை விவரிக்குக.

(iv) திருத்தெந்து-சங்க நடவடிக்கையின்போது எடுக்கப்பட்ட முக்கிய தீர்மானங்கள் எவை ?

**8.** இலங்கையின் கல்வி முன்னேற்றத்திற்கு ஐரோப்பிய மிசனறிமார் வலுவான அடித்தளமிட்டனர்.

(i) போர்த்துக்கேய பிரான்சிஸ்கன் சபை மிசனறிமார் இலங்கை மக்களின் கல்வி வளர்ச்சிக்கு ஆற்றிய பங்களிப்பை விவரிக்குக.

(ii) இலங்கையின் கல்வி வளர்ச்சிக்கு போர்த்துக்கேய இயேசு சபை மிசனறிமார் வழங்கிய பங்களிப்பைக் குறிப்பிடுக.

(iii) ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தில் இலங்கையில் வழக்கிலிருந்த பாடசாலை முறைமைகளைக் குறிப்பிட்டு, அவற்றுள் ஒன்றைப் பற்றி விவரிக்குக.

(iv) ஆங்கிலேயர் ஆட்சிகாலத்தில் இலங்கையின் கல்வித்துறையில் ஏற்பட்ட மாற்றங்களை விவரிக்குக.

The National e-Learning Portal for The General Education

* * *